**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 166/2022 DW2**

22.04.2026 **பி.வா.சா.2 சீனுவாசன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வாதி பாக்கியலட்சுமி எதற்காக வழக்கு போட்டுள்ளார், என்ன நிவாரணம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்று கேட்டால் அவர்களது பிள்ளைகளுக்கு எழுதிய சொத்தை வாதிக்கு நிரந்தரமாக்க சொல்லி வழக்கு போட்டுள்ளார். நீலகவுண்டர் 2007ல் ரங்கநாதனின் முதல் மனைவி பிள்ளைகளுக்கு வீட்டு மனை சொத்து ஆவணம் எழுதி வைத்தார். அவ்வாறு எழுதி வைத்த பிறகு பிள்ளைகள் தான் அங்கு வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல, அங்கு யாரும் வசிக்கவில்லை. வழக்கு சொத்து வீடாகத்தான் உள்ளது என்றும், பாக்கியலட்சுமியும் அவரது பிள்ளைகளும் அவ்வப்போது வந்து வசித்து செல்கிறார்கள் என்றால் சரியல்ல. தற்சமயம் அந்த வீட்டில் யார் வசிக்கிறார்கள் என்று கேட்டால் அந்த வீடு பாழடைந்து உள்ளதால் அந்த வீட்டில் யாரும் வசிக்கவில்லை. பிரதிவாதிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். எனது முதன்மை வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களது வாக்குமூலத்தில் ரங்கநாதன் என்பவர் தனது இரு சகோதரர்களுக்கு தெரியாமல் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பெற்றுக் கொண்டார் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் நான் எனது வாக்குமூலத்தில் நீலகவுண்டர் வாங்கிய கடன்களை பைசல் செய்வதாக கூறி அழைத்து சென்று 22.10.2007ல் தனது பிள்ளைகள் பெயரில் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பெற்றுக் கொண்டார் என்று பிரதிவாதிகள் வழக்கிற்கு முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 03.01.2008 தேதிக்கு முன்பு வேறு ஏதேனும் ஆவணங்கள் எழுதியதாக நீலகவுண்டர் என்னிடம் சொன்னாரா என்றால் செட்டில்மெண்ட் ஆவணத்தை பேத்திக்கும், இளைய மகனுக்கும் எழுதியதாக சொன்னார். 22.10.2007ல் நீலகவுண்டர் ரங்கநாதனின் வாரிசுகளான பூவையார், மோகன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் மைனர் சுந்தரமூர்த்தி ஆகியோருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி அவர்களிடம் சொத்தை ஒப்படைத்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை சொத்து ஒப்படைத்த பிறகு ரத்து செய்யகூடிய அதிகாரம் நீலகவுண்டருக்கு கிடையாது என்றால் மொத்த கூட்டுக் குடும்பத்தில் எல்லோரும் சேர்ந்து சம்பாதித்த சொத்து என்பதால் அவர் பேரன்மாருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தது தவறு. தான செட்டில்மெண்ட் எழுதி வைக்க மட்டுமே நீலகண்டனுக்கு அதிகாரம் உண்டு என்றும்,

ரத்து செய்வதற்கு அதிகாரம் இல்லை என்றால் ஆகவே 03.01.2008 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் எழுதப்பட்ட ஆவணத்தில் கண்ட சொத்தின் சர்வே எண் 562/10 ஆகும். நீலகவுண்டர் எவ்வளவு படித்துள்ளார் என்றால் சுமார் 2 - 3 ம் வகுப்பு படித்திருப்பார். சட்டப்படி செல்லாத ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளதால் எனது சாட்சியமும், மேற்படி ஆவணமும் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.